பங்குனி- சித்திரை

2010

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -03 எழுத்து -16




தடைகளைத் தகர்த்து
தகவுகளைத்தேடி

இருமாத கவிதை இதழ்

NEENKALUM EZHUTHALAM
( Poetry Magazine)

விலை 25/=

# நீங்களும் எழுதலாம்-16

இருமாத கவிதை இதழ்

மார்ச்- ஏப்ரல் 2010

ஆசிரியர்

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்

படைப்பாளிகள்

நீ.பி.அருளானந்தம்
ஏ.இக்பால்
ச.சிவகுமார்
நல்லை அமிழ்தன்
வை.சாரங்கன்
ஜெயா தமிழினி
அன்புநிலா
எம்.எஸ்.பாஹிரா
வே.சசிகலா
மூதூர் கலைமேகம்
ந.சந்திரசேகரன்
ஆர்.ஜோயல்ஜைரஸ்
என்.சர்மிலன்
எஸ்.ஆர். தனபாலசிங்கம்
ஏறாவூர் அலைக்தர்
பொன் சுகந்தன்
கலா விஸ்வநாதன்
செ.ஞானராசா
பாவெல்
நீலாபாலன்
எம்.எம்.அலிஅக்பர்
அலெக்ஸ் பரந்தாமன்
ஷெல்லிதாசன்
வி.கௌரிசங்கர்
அஷ்ரபா நூர்தீன்
க.வினுஷியா
கு.கார்த்தீபன்

அறிமுகக்குறிப்பு
இவரைப்பற்றி : ந.சந்திரசேகரன்
அஷ்ரபா நூர்தீன்

நீங்களும் எழுதலாம் முகவரிகள் :
ஆர்.ஜோயல் ஜைரஸ்
கருத்தாடற்களம் : ந. பார்த்தீபன், ஆசிரிய மாணவ விரிவுரையாளர்.
வாசகர் கடிதம்
மூலமும் யெர்ப்பும்

வடிவமைப்பு : க.தீபகாந்தன்
அட்டைப்படம் :ஓவியர் : கே.சிறிதரன்

தொடர்புகளுக்கு,
'நீங்களும் எழுதலாம்'
103/1,திருமால்வீதி, திருகோணமலை
தொ.பே: 0778812912
0267915836 / 0262220398.
E-mail:-neenkal@yahoo.com

# மெல்லத் தமிழினிச் சாகும்...

பாரதியின் 'தமிழ்த்தாய்' பாடலின் மேற்போந்த வரியினை தலைப்பாகக் கொண்டு கட்டுரை புனைவோர் பலர். இத்தகைய வெற்று கட்டுரைகளால் தமிழ்மொழிக்கு ஆகப் போவது ஒன்றுமில்லை.

**"மெல்லத் தமிழினிச் சாகும் -<br>அந்த<br>மேற்கு மொழிகள் புவிமிசை<br>யோங்கும்;"<br>என்றந்தப் பேதை உரைத்தான்"**

என்று தொடர்கிறது பாடல்

தமிழ் மாநிலமான தமிழ்நாட்டிலேயே கல்வியிலும் ஏனைய விடயங்களிலும் தமிழுக்கு உரிய இடம் கிடைக்காத சூழ்நிலையில் செம்மொழி மாநாடு போன்ற ஒன்று கூடல்கள் எதைத்தான் சாதித்து விடப் போகின்றன.

உண்மையில் தமிழ்மொழியை அதன் வீரியம் குன்றாது காத்துவருபவர்கள் சாதாரணமக்களே. எது எவ்வாறாயினும் செம்மொழிமாநாடு ஆரோக்கியமான நிலைமைகளுக்கு வித்திட வேண்டுமென்பது "நீங்களும் எழுதலாமின்" எதிர்பார்ப்பு.

**"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் கொண்டிங்கு சேர்ப்பீர்"**

என்பதற்கிணங்க பல விடயங்களை தமிழ்மொழி உள்வாங்குவதோடு, பொருளாதாய முன்னேற்றங்களும் ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் கலைச்சொல் லாக்கத்திற்கும் அடிப்படையானது என்பதை "நீங்களும் எழுதலாம்" குறிப்பிடவிரும்புகிறது.

மாநிலம் பயனுறும் செயற்பாடுகளையே நாம் வேண்டி நிற்கிறோம். நீங்களும் எழுதலாம்.

**அன்புடன்**<br>**ஆசிரியர்.**

# கண்ணாடியில் படியும் மூச்சுக் காற்று

கதவுகள் இல்லா வீடுகளிலே
வெளிப்படுத்தலிருந்து வெளிப்பட்ட
இந்தச் சாத்தான்கள் நுழைந்து
உள்ளேயாய் வந்து விட்டன

காற்றையும் தோண்டி
அதற்குள்ளாய் குதித்து வரும்
இந்தக் கள்வரிடமிருந்து
தம்மைத் தப்புவிக்க
ரொம்பச் சின்ன மூளைக்குள்ளே
இவர்கட்குச் சிந்தனையேது

திறந்து கிடக்கின்ற
அறைகட்கு உள்ளாயிருந்து
அவன் பிடித்துப் போவதற்கு
பலபேர் உண்டுதான்
அவர்கட்குத் தப்பிக்க
வேறு வழியில்லைத் தான்
சிக்கிக் கொண்ட சிலரை
பலங்கொண்டதாய் அவன் குத்துவான்
பின்பு கடலுக்குள் கொண்டு சென்றும்
அவர்களைப் புதைப்பான்
அவர்கள் கைவிலங்குகளோடிருந்து
நாறிப்போனதாய்ப் போய்விடுவர்

அவன் வேலை என்னவெனில்
இறந்தவர்களை விழுங்கி
வயிற்றுக்குள் நிறுத்துவது
அந்தத் திரவமும் சருமமும்
அவன் வயிற்றிலே கிடந்து
பிறகு இரைச்சல் போடும்
எனினும் அவன் மகிழ்ச்சியாய்த்
தன்நாற்காலியிலே இருப்பான்
இந்தப்பூவுலகமும்
இந்த அநியாயத்தைப் பார்த்தபடி
என்ன செய்யும்?

அதுவும் பூக்காதிருப்பது போல
சிரித்தபடி
அவனையே பார்த்துக்
கொண்டிருக்கும்.

நீ.பி.அருளானந்தம்

## நாலும் தெரிந்தவர்கள்

நாலும் தெரிந்தவர் நீங்கள்
நல்லதைத்தான் சொல்வீர்கள் - நாம்
நம்பத்தான் வேண்டும்.
நல்லதோ கெட்டதோ.....
நன்மையோ தீமையோ .....
வாய்மையோ, பொய்மையோ .....
எதுவாயினும்,
எடைபோட்டு முழி பிதுங்க
ஐமிச்சங் கொள்ளாமல் நாம்
நம்பத்தான் வேண்டும்
ஏனென்றால் ,
"நாலும் தெரிந்தவர் நீங்கள்"

"நீதி நியாயங்கள்
நிர்மூலமாகிவிட்டன!
"சட்டத்தில் ஓட்டையுண்டு" என்று
சஞ்சலப்பட வேண்டாம் யாரும்!

"சட்டத்தில் ஓட்டைகள் இருப்பதால் தான்
சத்தியங்கள் சலித்தெடுக்கப்படுகின்றன"!
உண்மையைத் தான் சொன்னீர்கள்
ஏனென்றால் ,
நாலும் தெரிந்தவர் நீங்கள்
மரத்தைத் தாங்குவன
வேருமன்று , விழுதுமன்று
சத்தியமாய்க் கிளைகள் தாம்
சந்தேகம் வேண்டாம்

இருளுக்கு கண்ணில்லையென்று
பொருள் கொண்டவன் பைத்தியக்காரன்
இருளுக்கும் கண்ணுண்டு........
குருட்டு விழிகள் பயணப்பட்டால்

கலியாண வீடு மட்டும்
களைகட்டக் கூடாது கலகலப்பாய்
இழவு வீடுகளிலும்
இன்னிசைக் கச்சேரி
இழையோட வேண்டும் பொலுபொலுப்பாய்
வாஸ்த்வந்தான் உங்கள்
வாய்மொழி பிழைக்காது!
ஏனென்றால்
நாலும் தெரிந்தவர் நீங்கள்
நல்லதைத்தான் சொல்வீர்கள் - நாம்
நம்பத்தான் வேண்டும்

ஏறாவூர் அலைக்தர்

# நாயிலும் கடையன்

இளம் வயதுடை இனிய குமரி
மணம் முடித்ததால்
பிள்ளைத் தாச்சி!
ஓடும் 'பஸ்' ஸில் ஏறியமர்ந்து
நாடும் இடம் நோக்கிய வேளை
உள்ளிருந்தோர் ஒவ்வோரிடமும்
இறங்கியிறங்கி இவளொருத்தி
தூங்கித் தனித்தாள்!

சாரதி உடனே 'பஸ்' ஸை நிறுத்தி
சார்ந்தவளிடத்தே யணுகி
மோசமாகவே நடந்து விட்டான்!
ஒன்று மறியாப் பிள்ளைத் தாய்ச்சி
உபாதை யுற்றுக் காவலர் நாடிய
கதை ஒரு பத்திரிகைச் செய்தி!

பெட்டை நாயொன்று
பதுங்கிப் பதுங்கிச் செல்லும் வேளை
ஆண் நாய் அதனை அண்மிய போது
வாலை வளைத்துப் பாலுறுப்பை மறைத்தது!
உடனே ஆண் நாய் அதனை முகர்ந்து
உடனடி விலகி ஒதுங்கிச் சென்றது!
குட்டித்தாய்ச்சி என்பதை யறிந்த
ஆண் நாய் அதனை அணுகவே யில்லை!
நாயினும் கடையனான மனிதன்
நாறிய செயலால் மனித குலமே
மதிப்பை யிழந்தது.

ஏ.இக்பால்- தர்க்காநகர்

---

## ஏது செய்தீர்

தாய்நாட்டின் விடுதலைக்காய்உழைப்போ
மென்றீர்!
தமிழ்மொழியைக் காக்க உயிர்கொடுப்போ
மென்றீர்!
தாய்நாட்டின் பெருமை பல எடுத்துரைத்தீர்
தமிழர் நன்கு வாழவழி வகுப்போ மென்றே
பேய்க்கூச்சல் இடுகின்றீர் வானம் முட்ட!
பெருமை தான்: நாமதனை எதிர்க்க
வில்லை!
நாய்போன்று வாழ்கின்றார் தமிழர் இன்று.
நாதியற்ற அவர்க்காக ஏது செய்தீர்?

பசுபதி (1950-1965)

## அன்பகத்தில்லாவுயிர்

பச்சை மரம்
பட்டுருகிப் பட்டைகளை
பட்டாடைகளாய்
கழற்றுகின்றது........

பசிய வயலொன்று
வானம் பார்த்தே
தலை நோகத்
தலை சாய்ந்தே
நெட்டென நிமிர்ந்து
கிடக்கிறதே நிறம்மாறி....

சுட்டெரிக்கும் சூரியனின்
சாகசத்தின் தொடர்கதையாய்
நீள்கிறதே......
நீரின்றிய நிலம்......!

பொன்.சுகந்தன், கரவெட்டி

---

## அழகான விதைகளை பாடுக.....

என்கவிதை
எனை தேடிக்கொண்டிருக்கிறது
திறந்த கண்களுடன்

வட்டத்தை விட்டு
வெளியே நீட்டப்பட்டுள்ள பாதம்

புறாவுக்கு உள்ளது போன்ற
சிறகுகள் எனக்குத் தர வேண்டும்

நெரிசல்களில் உடைந்து
மறைந்து கொண்டிருக்கும்
மலையின் தேநீர் கோப்பை

காப்பாற்றப்பட வேண்டிய
அதன் மகிழ்ச்சியின் மீது
கவிதை ஒளி பிரகாசிக்கிறது

ஒளித்து விட முடியாத
அழகான விதைகளை
இப்போது பாடுக
பிடிப்படாத பவித்திரத்தை
வெளிக்காட்டியும்.

சண்முகம் சிவகுமார்- கொட்டகல

# குயிலுக்கு கூடு இல்லை!

குயிலுக்கு கூடு இல்லை
குவலயம் அறிந்த உண்மை
குயில் கூவும் குயிலோசை
காதோடு கீதமாய் கவனத்தை ஈர்க்கும்.

வசந்த கால தென்றலாய்
வாழ்க எனக் குயில் கூவும்
அசந்த மனதைக் கூட
அடடா எழுந்திரு என அழைக்கும்.

ஆனால்:
குயிலுக்கு வீடு இல்லை!
காகத்தின் கூட்டில்
வாடகை கொடுக்காது
குயில் குடிப் போய் முட்டை இடும்.
முட்டையிலிருந்து வரும் குட்டிக்குயில்,
காகத்தின் பராமரிப்பில்
நேசமாய் சிறகு விரிக்கும்.

குட்டிக் குயில்
"கா கா" எனக் கத்தாது.
"கூ கூ" வென கூவும்
குரலோசையில்
இனப்பிரச்சினை ஆரம்பமாகி விட்டது.
இனி என்ன செய்ய?
காகங்கள் குயில் குஞ்சை
கொத்தி கொத்தி துரத்தும்.

கூடில்லாப் போதும்
குடும்பம் இல்லா நிலையிலும்
குயில் குஞ்சு இந்தப் பிரபஞ்சத்தில்
கூவிக் கூவி வளரும், வாழும்.

கலா விஸ்வநாதன்

வாசகர்களே,
நீங்களும் எழுதலாம் இதழின் வளர்ச்சிக்கும், தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.சந்தாதாரர் ஆவதோடு உங்களது நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவுங்கள். அன்பளிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படும்

## தேவதைகள்

அசுத்த தேவதை
அரசியலில்~
நுழைந்துள்ளது

ஆணவ தேவதை
ஆயுதத்தில்
நுழைந்துள்ளது

சுரண்டல் தேவதை
வர்த்தகத்தில் ~
நுழைந்துள்ளது

ஓங்கார தேவதை
ஊடகத்தில் ~
நுழைந்துள்ளது

எழுதாத தேவதை
இலக்கியத்தில் ~
நுழைந்துள்ளது.

காதல் தேவதை
காமத்தில்
நுழைந்துள்ளது

நல்லை அமிர்தன்

---

## அடிபடும் இலட்சியங்கள்

இருத்தலுக்கும் நிலைத்தலுக்கும்
இவர்களது கட்டமைவுகள்
எங்களை இரட்சிக்காத
கடவுளர் வரை
தூணிலும் துரும்பிலும்
இருப்பதாகக் கூறி
நாறிக்கிடக்கும்
அதிகாரத்தனத்திற்கு
அடிபணிந்து கிடக்கும்
அடிமைத்தனங்கள்
கொதித்தெழுபவன்
முளையிலேயே
கிள்ளியெறியப்படும் பரிதாபம்
ஒட்டை ஒடிசல்களுக்குள்
புகுந்து
தம்மை உயர்த்திக் கொள்வோரால்
அடிபட்டுப் போகின்றன.
சிலரின்
உன்னத இலட்சியங்கள்

பாவெல்

## வசந்தம் வரும்

அசந்து போன மானிடரே
அழிவுக் கால மிதுவென்று
கசந்து போகக் கூடாதே
கடமை யாற்றி இருப்பீரே!

இலைகள் உதிரும் தளைத்துவரும்
இதுதான் வாழ்வின் நியதியென
கலைகள் கூறி வைத்த விதம்
காணா திருந்து போனீரோ!

கொலைகள் அதிகம் நடக்கின்ற
கொடூரச் செயலைக் கண்டஞ்சி
விலைகள் பேசும் உயிருக்கு
வினோதமான காலமிது

அலைகள் மோதும் கடல் மீது
அலைந்து போகும் துரும்பாக
வலைகள் இங்கு உமக்குண்டு
வாடிச் சோர்ந்தால் உய்வில்லை

நிலை தளர்ந்து போகாமல்
நிலைக்க சிலது செய்திட்டால்
அலையும் அமைதி காட்டி நிற்கும்
அப்போ மகிழ்ச்சி யூட்டி வைக்கும்

இன்னல் கண்டு இயங்காமல்
இருப்ப தாலே பயன்வருமா
செந்நெல் விதைத்து வைத்திடுவீர்
செழுமையோடு செழிப்பு வரும்

செ.ஞானராசா :அன்புவழிபுரம்


கவிதைக்கான.......
பயில்களம்
பரிசோதனைக்களம்
காத்திரத்தின்களம்
கருத்தாடற்களம்
விளக்கக்களம்
விமர்சனக்களம்
நீங்களும் எழுதலாம்

## 1987க்கு பிறகு பிறந்தவன்

பக்கத்து நாட்டு ராஜா
செத்து விட்டார்
கப்பம் வாங்கி
கறுப்புப் பூனைகளின்
வரிசைகளை ஒழுங்காக்கி
ராஜா!நடந்து வந்தபோது
வன்னியில் காடுகளிலும்
"தார்" பாலை வனத்திலும்
குரல் வளையை இறுகக்கட்டி
கண்களை விண்நோக்கி நிமிர்த்தி
விடியலைப் பார்த்திருந்தோம்.

ஐயனார் கோவிலின் பின்புறம்
காற்றாளைகள் முளைத்த பனங்காடு
"குஞ்சுமணி" அக்காவுட்பட
என் ஊர்ப் பெண்கள்
துயாக்கப்பட்டார்கள்

ராஜா! நீங்கள்
செத்து விட்டீர்கள்
எங்கள் வீடுகளில்
இலுப்பெண்ணை விளக்குகள்
எரிந்தன
உங்களுக்காய் அழ
ஏராளம் பேர் இப்போதும்
இருக்கிறார்கள்

தவறுதலாக சைக்கிளுக்கு
குறுக்கே போனதற்காக
என்னைத் திட்டினார்கள்
"இந்தியனாமிக்குப் பிறந்தவன்"

1987 க்கு பிறகு
நான் பிறந்தது
"துன்பியல் சம்பவம்"

வை. சாரங்கன்

---

### நீங்களும் எழுதலாம்
கிடைக்கும் இடங்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை - செட்டித்தெரு
கொழும்பு-11
பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கொழும்பு-06
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
புக் லாப் - யாழ் பல்கலைகழக அருகாமை
ப.நே.கூ.ச - கட்டைவேலி கரவெட்டி
நெல்லியடி.

## நானிலம் மேனிலை எய்திட ....

விழிகளை அகலத்திறந்து
அறிவினைக் கூர்மையாக்கி
ஐம்புலன்களை செயல்களுக்குள் ஈடுபடுத்தி
வாழ்க்கையெனும் பாதைதனில்
வாகனமெனும் மனத்தினைப் பத்திரமாய்
ஒட்டுவதாயும் - ஆனால்

ஏற்படுத்தப்படும் விபத்துக்களுக்குள்
உள்ளிருக்கும் சக்திகளனைத்தும்
காயம் பட்டுக் கருகி விடுமோவென
அஞ்சுவதாயும் வரைந்திருந்த – உன்
மடலொன்று கண்டேன் தோழி

உயிரினுமினிய என் தோழியே
விதி வரைந்த பாதைதனில்
வாழ்க்கை ஓடுது எனும்
பாடலடிக்குப் பொருளாகாமல்
வீணாய் அழிந்து போகாமல்
ஆக்கபூர்வமானவைகளை ஆக்கி
அன்புலகு ஒன்றை உருவாக்குவதற்காய் -
நாளும்
ஏணியாய் உயர்ந்து நின்றிடு

தொலைக்கப்பட்ட கணையாழிக்காய்
கானகத்தில் காரிருளில் தன்னந்தனி
நின்றிருக்க வேண்டியவள் நீயல்ல
தொழுநோய்க் கணவனை தோளில்
சுமக்க வேண்டியவளுமல்ல
ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்தி
நாட்டினை நாசமாக்க வேண்டியவளுமல்ல
நானிலம் மேனிலை எய்திட – நீ
அயராது உழைத்திட வேணடியவளே!!!

ஜெயா தமிழினி


வங்கி மூலம் சந்தா செலுத்த
விரும்புவோர்
வருட சந்தா **200/=**
**R.Thanabalasingam**
**A/C No: 106653402077**
**Sampath Bank, Trincomalee**
என வைப்பிட்டு பற்றுச்சீட்டை
அனுப்பிவைக்கவும்
வெளிநாடு **US $ 10**

# இருக்கிறோம்

இதயத்தைத் தொலைத்து விட்டு
இருக்கின்றோம் எல்லோரையும் போல.....
கனவுகளில் குளித்த மகிழ்ச்சிகள் கூட
தரை தொட்ட கால்களால் கலைந்து
போயின.

வெளிச்சம் தேடிய நினைவுகளை
மனங்கள் மறந்து போயின.

விடியல்கள் ,
விழிகள் தேடிய விடியல்கள்,
அறிமுகமாகாமலே
கிடுகு வேலிக்குள்ளிருந்து
முதுகு காட்டின.

மனங்கள் மரணித்துப் போனதால் .....
பூக்களின் வாசம்
மூக்குகளை நெருங்குவதில்லை
மூக்குகளும் முகர்ந்து பார்க்க
முயற்சிப்பதில்லை.

ஏனெனில்
நாற்றங்களே நறுமணங்களாகவும்,.....
ஊத்தைகளே விருப்பத்திற்குரியதாகவும் .....
படம் காட்டுகின்றன.

அலவாங்கு விழிகளால் அடிவாங்கி
உடைந்து போயின எமது உணர்வுகள்.

இழந்து போன முதல்களுக்காக....
கூடம் காட்டும் அன்பளிப்புகள்,
தானம் போடுகிற தந்தனாக்கள்

கற்களுக்குள்ளும் ஈரம் இருப்பது
கதைகளுக்குச் சரியாகலாம்
நடப்பியலில் நாங்கள் பிணங்களாகவே ....
இங்கு கணிக்கப்படுகின்றோம்.

இன்னும் இருக்கிறோம் நாங்கள்
உணர்வுகளைத் தோற்று விட்டு .....
உறவுகளைத் தொலைத்து விட்டு .....

நீலா பாலன் - வெலிமட

புனைபெயரில் எழுதுவோர் தமது சொந்தப் பெயர் முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டும்.

## உயிரின் வலி

உடலோடு உள்ளமும்
சேர்ந்தே கிடக்கிறது
பட்டினியாய்
உதவிடத்தான் இங்கு
யாருமில்லை எமக்கு!

அகதி என்ற பட்டமும்
அகதி முகாம் வாழ்க்கையும்
எமக்கே தான் இன்றும்
சொந்தமாகிப் போனதோ?

கல்விஎன்பது
எமக்கிப்போ(து)
எட்டாக்கனி தான்!
நம் கையே நம்மை
குத்தி விட்ட சோகத்தை
எங்கு போய்
சொல்லியழுவது?

நம்பிக்கை தான் வாழ்க்கை
என்றாலும் அது கூட
இப்போது எம்மிடமில்லை
என்றாகிப் போனதே

நிர்க்கதியான நானோ
இன்று நிம்மதியிழந்து
நிரந்தர அகதியாய்
நீண்ட வரிசையில் ,....
உடலோடு ஒட்டியிருக்கும்
உயிரை மட்டுமாவது
காத்துக் கொள்ளும் எண்ணத்தில்
நிவாரணத்திற்காய் ...............?

உயிர் வாழத்தான்
நிவாரணம் - என்
உயிரின் வலிக்கு....?

**அன்புநிலா, திருகோணமலை**


கடிதவழி தனி இதழைப் பெற விரும்புவோர் 5/= பெறுமதியான 7 முத்திரைகள் அனுப்பவும். வருட சந்தா 200/= (தபாற்செலவு உட்பட) அனுப்பவேண்டிய தபாலகம் திருகோணமலை முகவரி எஸ்.ஆர்.தனபாலசிங்கம் 103/1 திருமால் வீதி,திருகோணமலை.

# பாதைகளும் கொந்தராத்துக்களும்

கிராமப் பகுதி
பாதைகளின் மடியில்
பாலை மணல் அல்லவா
மேடை போட்டுக் கொண்டிருக்கிறது
பாதைகளின் நடுவில்
பள்ளங்களும் படுகுழிகளும்
அமைதியாக தூங்கிக்கொண்டிருக்க
விழித்து விழித்துப் பார்க்கிறதே
அதிலுள்ள கரடு முரடுகள்

பாதைகள் அமைக்க வரும்
கொந்தராத்துக் காரர்களின்
உள்ளங்களும்
பாதையின் பள்ளங்களும்
ஒரே சமன்பாடுதான்
பணம் சுரண்டும்
இப்படிப்பட்டவர்களின்
மூளைகளுக்குப் போட வேண்டிய
பெச்சை
எமது பாதைகளுக்கல்லவா
போடுகிறார்கள்
கல்லையும் மண்ணையும் போட்டு
கடினமாய் தாரை வார்ப்பதற்கு
பதிலாக
தாரை வாரக்கின்றீர்களே
பணத்தையெல்லாம்
உங்கள் பைகளுக்குள்

பாதைகளுக்கு வைத்தியம்
செய்பவர்களே !
நீங்கள் போடும் போலியான
பாதைகளில்தான்
உங்களின் நடமாட்டங்களும்
நடந்து கொண்டிருக்கின்றன.
உங்களின்மரண ஊர்வலம்
அதுவும் நீங்கள் போட்ட
பாதையால் தானே
காவப்படப் போகின்றது.

**எம்.எம்.அலி அக்பர் கிண்ணியா**

அறிமுகக்குறிப்பில் உங்கள் கவிதைத் தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒருபிரதியை அனுப்பிவையுங்கள் 2008ற்கு முன் வெளியானவை அறிமுகக்குறிப்பில் இடம்பெறமாட்டாது

## வார்த்தை வெட்டுக்கள்

வாழ்வின் வளமதை
தாழ்வின் களமாக்கி
சால்புகளை சாத்திவிட்டு
சஞ்சலங்களை நிறுத்திடும்
வாளின் கூர்மையை விட
வன்மம் படைத்தவர்களின்,
வார்த்தை வெட்டுக்கள்
உயிர் வேரையறுத்து
உரிமையற்றதாக்கிடும்
உனதான இயல்புகளை!

முன்னால் நின்று முறுவலிப்பர்.
பின்னால் திரும்பி கருவறுப்பர்
பொல்லாத் தனம் படைத்தவர்களின்
பொல்லாங்குகளால்
நல்லவர் பண்புகள்
கொல்லன் பட்டறை இரும்பாக
சுயமிழக்கிறது.

நோய் பரப்பிடும் வைரசுகளாக
அடுக்கடுக்கான அவதூறுகளின் திண்மை
திடுக்கிடச் செய்யும்
வெடிகுண்டுத் தாக்குதல்களாக,
அதிர்வுகளும் , அதிர்ச்சிகளும் ,
பாதையின் செம்மையை
எதிர்மறையாக்கிடும்
பிரமைகளுக்கு
பிரமாதமாக வர்ணந்தீட்டி
வடிவமைக்கும் புல்லுருவிகளால்
சந்தேக சூறாவளிகளே நித்தமும்!

எம்.எஸ்.பாஹிரா, பதுளை

## செந்நா பொரிக்கிறது

சிந்தையோடு
காமம் புணர்ந்து
கருவுறும் செந்நா
நொடிக்கு நொடி
நூறாயிரம் குஞ்சு பொரிக்கிறது

தினந் தேடிப்
பிணந் தின்னும்
காக்கைதான் இடமெங்கும்

இடர் தீர
இசை படும்
குயிற் கூட்டம்
கொஞ்சந்தான்

தா. இராமலிங்கம் "நன்றி காணிக்கை" (1965)

## வெற்றுக் கோது

ஊர் அடங்கியிருந்தது
ஊரடங்குச் சட்டத்தில்
ஊர்ச் சனங்கள் அனைத்தும்
உறங்கிக் கிடந்தன
அகதி முகாம்களில்!

## உதிர்வுகள்

முன் முகாமினுள் முடங்கியது
வாழ்க்கை மட்டுமல்ல
எங்கள் முன்னேற்றமும் தான்
கலண்டர் தாள்கள்
காலாவதியாகுவது போல்
உதிர்ந்து போகின்றன
எங்களின் ஆளுமைகள்!

## முற்பகல் செய்யின்

ஊரை ஏய்த்தேன்
பிறர் உழைப்பைச் சுரண்டினேன்
இன்று
எல்லாமே போனதே
இடப்பெயர்வோடு!

ஏலெக்ஸ்பரந்தாமன்

---

## நினைவுகள்

காயங்களின் கசப்பான
நினைவுகளை
மறக்க எத்தனித்தாலும்
ரணங்களின் அடையாளத்தை
எதை கொண்டு
பூசி மறைப்பது ........?

சுழன்று கொண்டிருக்கும்
நினைவுகளோடு
தினம் தினம்
போராடும் ஒரு
போராளியாக நான் ....!

அந்த மின்மினிப்
பூச்சிகள் கூட
என் வாழ்க்கைக்கு
வெளிச்சம் தர மறுத்து விட்டன...!

நான்
தந்தியறுக்கப்பட்ட வீணை
இதை மீட்டினால் ......?

வே.சசிகலா கிழக்கு பல்கலைக்கழகம்

# பந்தலுக்குள் பனிமழை

தென்றலல்ல இது
தெருமண்ணை கண்களில்
வீசியிறைக்கும் சுழல்காற்று!

வசந்தமல்ல இது
வதைத்தெடுக்கும்
கொடுங்கோடை!

விடியலல்ல இது
விடியாத இருளுக்குள்
வீழ்த்திவிடும் பெருமுனைப்பு!

குடிகளல்ல மக்கள்
குடி மூழ்கவைக்கப்பட்ட
அடிமைச் சாசனங்கள்!

சுதந்திரமா இது
நிரந்தரமாய் அதனை
நெடுநாளாய்
காவு கொடுத்த ஏக்கங்கள்!

சேற்றுக்குள் கால்வைத்த நாம்
சேற்றுக்குள்ளேயே சிக்குண்டு
பார்த்திருக்க
காற்றுள்ள போது தூற்றியெடுத்துக்
கட்டிப் பயணிக்குது அவர்கள்
வண்டில்கள்!

கிள்ளித் தெளிப்பதை
அள்ளியெடுத்த திருப்தியில்
வாய்ப்பந்தலுக்குள் ஒதுங்கி
மழையில் நனைந்து
குளிரில் விறைத்து... நாம்!

பரிவுகாட்டல் மூலம்
பக்கவிளைவுகளை பதம்பார்த்து
காய்நகர்த்தல் நடக்கிறது
வெறுங்கையால் முழம்போட்டு!

ஷெல்லிதாசன்


வெளிவரவிருக்கிறது
நீங்களும் எழுதலாம் இதழின்
கன்னி வெளியீடாக
ஷெல்லிதாசனின் "செம்மாதுளம்பூ"
கவிதைத் தொகுப்பு.

## பேதமது போக்கி விடு!

கட்டுக் கட்டாய் பணம் சேர்த்து
கள்ளத் தொழில் தான் செய்து
பட்டுடையால் உடல் போர்த்தும்
பாதகரே சிந்தியுங்கள்!

சாதி பேதம் மனிதரிடை
சாதித்த கதை என்ன
ஆதியிலே அவ்வை மொழி
ஆண் பெண்ணே இதுவாகும்

குலச் சண்டை இனச்சண்டை
குடும்பத்துள் வலுச்சண்டை
பல மண்டை உடைவதுவே
பல் சாதிக் கோட்பாடு!

அறிவுள்ள மானிடரே
இனி வேண்டாம் சாதி வெறி
பொறி பட்ட எலி போல
புண் பட்டு மாயாதீர்!

பரந்தோடும் இரத்தத்தில்
பல் நிறங்கள் சேர்வதில்லை
தரம் பார்க்கும் சாதிமுறை
தனை விட்டு நீக்கி விடு!

ஏதூர் கலைமேகம்

---

## அத்துமீறிய அணை

இன்னமும் கூட
அவ்வப் போதுகளில்
எம்முடைய கால்களை மட்டும்
தக்க வைத்துக் கொள்ளவே
அவாப்படுகின்றோம்.
இப்போதெல்லாம் எம்மவர்களே
கைரேகைக்குப் பின்னரான
ஒளிவுகளை ஆராய்கின்றனர்
சித்தன் தவசிகளின் ~ வாக்குகள்
செல்லாதவையாகின
தன்னலத்தை விட்டு விடு
பட்டினியை ஒழிப்போம்
சாத்தான்களை ஒழிக்கவே
விரதமிருப்போம்
சாதியை ஒடித்தெறிவோம்
சக்தியை உணர்ந்து கொள்
உரக்கச் சொல்லி
அணை போடுங்கள்
வான் மழை கூட
வரண்டு போகட்டும்
நாங்களே கண்ணீர் கொண்டு
நிரப்புவோம் ~ உங்கள்
அணைக்கு — நீர்
அடையாளப்படுத்துகிறேன் ~ ஆம்
அதுதான் எங்களின்
ஆனந்தக் கண்ணீர்

வீ.கௌரி சங்கர். திருகோணமலை

அறிமுகக்குறிப்பு

## பேசற்க (கவிதைத் தொகுதி)

### கு.றஜீபன்




"இன்று ஈழத்து இலக்கிய மரபு புதியதொரு இலக்கியத்தளத்திற்கு நுழைய வேண்டிய காலம் உருவாகி வருகின்றது. அத்தகைய தள மாற்றத்துக்கான ஒரு முன் உதாரண முயற்சிதான். இப்படைப்புருவாக்கம்" எனக் கூறும் கு. றஜீபனின் நான்காவது கவிதைத் தொகுதி இது. இரக்கமற்ற இருண்மைப் பொழுதுகளில் உயிர்ப்பின் அவசியத்திற்கான உணர்வின் ஊசலாட்டம் கவிதையாக உருவப்பட்டிருக்கிறது. என ஆசிரியர் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு உதாரணமாக "தீ நிமிடங்கள்" எனும் முதற்கவிதை அமைந்துள்ளது.

"இருப்பின் ஈரம்
உலர்ந்து உலர்ந்து
முடிப்பை நோக்கியா
முன்னகர்கிறது
எங்கள் அசைவியக்கம்
பிடிமாணம் இல்லாத
பீத்தல்களில்
அடிமானம் பொத்தக்கூட
ஆண்மையிழந்து
அழுகிய பார்வைகளினூடு
அசைந்து செல்கிறது
தீ நிமிடங்கள்"

தொடர்பு:
38, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்

**மௌனத்துயில், வலிகளைத்தாங்கி, ஒரு நதியின் தேடல் ஆகிய கவிதைத் தொகுதிகளை வெளியீட்டுள்ள ஆசிரியரின் நான்காவது தொகுதியான "பேசற்க" அவரைப் பேச வைக்கும் படிக்கல் எனலாம்**

விலை:200.00

## உள்ளக் கிடக்கைகள்
### (கவிதைத் தொகுதி)

புவிலக்ஷி




விலை 100/-

தொடர்பு: சரஸ்வதி வித்தியாலய வீதி
பெரியநீலாவணை -01, கல்முனை

"இருக்கிறம் இருக்கிறம்
முட்கம்பிகளுக்குள்
முள்ளுப் பற்றைகளோடு
வெட்ட வெளியிலே..........

அரிசிக்கும் பருப்புக்கும்
அடுத்தவரிடம் கையேந்தி
நெருப்படியிலே
இருக்கிறம்"

❖

"கணக்கில் போட்டது
காணாமல் போகவே
காரணங் கேட்டு
களைந்து விடத் துணிந்தான்"

தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளின் வரிகள் இவை. "யுத்த அவலங்கள், வறுமை சீதனக்கொடுமை, சூழ்நிலை நெருக்கடிகள் என்பன புவிலக்ஷி கவிதைகளின் பாடுபொருள்களாக அமைகின்றன". என அணிந்துரையில் எஸ். ஆர். தனபாலசிங்கம் குறிப்பிடுவதை ஞாபக மூட்டுவதாக மேற்போந்த வரிகள் அமைகின்றன

மேலும் "...... இந்த தொடர்ச்சியில் ஒரு துளியாக குடும்பம் சிதறி மனிதவிழுமியங்கள் சிதைந்து போன சூழ்நிலையில் தனிமனித உணர்வுகள் படும்பாடுகள் இங்கே பதிவாகியுள்ளன". என ஊடகவியல் கல்லூரி விரிவுரையாளர் தேவகௌரி குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

"உள்ளக்கிடக்கைகள்" புவிலக்ஷியை எதிர்காலத்தில் சிறந்த கவிதைகளை தரக்கூடிய ஒருவராக அடையாளப்படுத்துகிறதெனலாம்.

இவரைப்பற்றி .....

ந.சந்திரசேகரன்



அறிமுகம் : 05

1985 இல் பாடசாலை கையெழுத்துச் சஞ்சிகையில் "ஊர்ஊராய்" எனும் கவிதையை எழுதியதனூடாக இலக்கியத்துறையில் நாட்டங் கொண்ட நல்லையா சந்திரசேகரன் 1972 இல் மாத்தளை , இரத்தோட்டையில் பிறந்து தற்போது மா/வேல் மட.த.வித்தியாலயத்தின் அதிபராக விளங்குகின்றார். புதுக்கவிதை , குறுங்கவிதை (ஹைக்கூ) பாடலாக்கம் , சிறுகதை , கட்டுரை ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்ட இவரது படைப்புக்கள் வீரகேசரி , தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் , குன்றின் குரல் , பூங்காவனம் ஆகிய சஞ்சிகைகளிலும் , மத்திய மாகாண சாகித்திய மலர் , ஆசிரிய கலாசாலை மலர் , பிரகாசம் ஆகிய மலர்களிலும் வெளிவந்துள்ளன.

2007 இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றதோடு , 2009 இல் மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். "அகிலம்" சஞ்சிகை நடாத்திய கவிதைப்போட்டியில் 3ம் இடத்தைப் பெற்றதேடு கலாசார அலுவல்கள் திணைக்கள பாடலாக்கப் போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

"நீங்களும் எழுதலாம்" இதழில் கூட்டொப்பந்தம் கூட வருமா?, நியாயம் கண்ட மனசு , சந்ததிக்கு இனியும், குருவின் பார்வை ஆகிய கவிதைகளையும் 15 ற்கும் மேற்பட்ட ஹைக்கூ கவிதைகளையும் எழுதியுள்ள இவரை "இவரைப்பற்றி" பகுதியில் அறிமுகப்படுத்துவதில் "நீங்களும் எழுதலாம்" பெருமிதமடைகிறது

முகவரி : இல: 10 , பிரதான வீதி ,இரத்தோட்டை

தொ.இல : 0778214618 , 0718322430

## தேசமே ஒரு தடவை திரும்பிப் பார்!

தேசமே .......! ஒரு தடவை
திரும்பிப் பார்!
உன் தேசாபிமானிகளை
தேர்தலின் போது மட்டும்
தேசாபிமானிகள் .....
தேகம் உரித்து
தே(வ)சம் க(ா)ட்டுகிறார்கள்

காலச் சுழற்சியில்......
கட்டாயங்களில்....
எண்ணங்களும் சின்னங்களும்
எதிரிகள் கூட
ஏன்....?
இடம்மாறி போகிறார்கள்?

வாக்குச் சாவடியில் ~ வெறும்
சவத்தின் முன்
ஒப்புக்காய் ஒப்பாரி பாடும்
ஒரு தரப்பு போல
ஒட்டாண்டிகள் பலர்
ஓட்டுப் போடுகிறார்கள்......!

சில சில்லறைகளும்
மேடைப் பேச்சை
காடைப் பேச்சாக்கி
கட்சிப் பேச்சாக்கி
கட்சிப் போர்வையில்
கட்டுப் பணம் கட்டுகிறார்கள்

தேசத்தாயே....!
திரும்பிப் பார்....
தேசம் சின்னங்களால்
சிதறிக்கிடப்பதை
ஒரு தடவை திரும்பிப் பார்

என்.சந்திரசேகரன் -
இறத்தோட்டை

**பாடுங்கள்**

இன்னவை தான் கவி எழுத
ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்
மின்னல் முகில் சோலை கடல்
தென்றலினை மறவுங்கள் மீந்திருக்கும்
இன்னல் உழைப்பு ஏழ்மை , உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்

மகாகவி (து.உருத்திரமூர்த்தி) நன்றி

# அஷ்ரபா நூர்தீன்



அறிமுகம் -06

1982 இல் "சுடர்" சஞ்சிகையில் "தமிழன்னை சிரிக்கிறாள்" எனும் கவிதையை எழுதியதனூடாக இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்தவர் அஷ்ரபா நூர்தீன் (அஷ்ரபா) , 1962 ல் திருகோணமலையில் பிறந்த இவர் அண்மிய கிராமமான பாலையூற்றை வசிப்பிடமாகக் கொண்டவர்.

கவிதை , சிறுகதை , கட்டுரை , நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்ட இவரது வானொலி நாடகங்கள் 12 ற்கும் மேற்பட்டவை முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகியுள்ளன. சிந்தாமணி ,தினகரன் , சரிநிகர் , சூடாமணி , வீரகேசரி ஆகிய பத்திரிகைகளிலும் , சுடர் , தாயகம் , பெயர் , சுட்டும்விழி , முக்கனி , தூது , கோகுலம் ஆகிய சஞ்சிகைகளிலும் , இன்னும் பல றோணியோ சஞ்சிகைகளிலும் வெளிவந்த கவிதைகள் என, இவர் சேகரிப்பில் மட்டும் உள்ளவை நூற்று முப்பதுக்கும் மேற்பட்டவை. இதை விடவும் அச்சுருவாகாதவை வேறு

பாலையூற்று அஷ்ரபா , அநூ , ரபா , ஆஷா ஆகிய பெயர்களிலும் எழுதியுள்ள இவர் இலக்கியத்துறைக்காக 2007 இல் திருகோணமலைப் பிரதேச செயலக சாகித்திய விழாவில் கௌரவிக்கப்பட்டார். 1985 காலப்பகுதியில் "சிந்தாமணியில்" வெளியான இவரது பதிற் கவிதைகள் சுவாரசியமானவை. ஆரம்பத்தில் அழகியல் சார்ந்து எழுதிய இவர் ,பின்னர் பெண்ணியக் கருத்துக்களிலும் செயற்பாடுகளிலும் நாட்டங் கொண்டு பெண்ணியக் கவிதைகளை நிறையப் படைத்துள்ளார். ஈழத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய பெண் கவிஞர்களில் அஷ்ரபாவும் ஒருவர். தீவிர வாசகர்களது கவனத்திற்குட்பட்ட இவரது கவிதைகள் நூலுருப் பெறாமையால் விமர்சகர்களது கண்ணிற்படாமை கவலைக்குரியது.

விரைவில் இவரது நூலொன்று வெளிவரவேண்டுமென்பது "நீங்களும் எழுதலாமின்" எதிர்பார்ப்பு.

ஆசிரியரான இவரது கணவர் அ.வா.முஹ்சீன் இவரது முயற்சிக்கு உறுதுணையாக இருந்த போதிலும் தொழில் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமை ஆற்றும் இவர் வேலைப்பளு காரணமாக எழுதுவதை குறைத்துக் கொண்டார். இருந்த போதிலும் "நீங்களும் எழுதலாம்" இதழில் "நீயும் நானும்" , "புதிய ஆத்திசூடி" ,"சில நண்பர்களும் சில உறவினர்களும் இன்னும் சில மனிதர்களும்" , "உனக்கான எனது பாடல்" , ஆகிய கவிதைகளை எழுதியுள்ளார். இவரை "இவரைப்பற்றி" , பகுதியில் அறிமுகம் செய்வதில் "நீங்களும் எழுதலாம்" பெருமிதமடைகிறது.

இவரது தற்போதைய முகவரி -

இல: 30,மகூதிவீதி ,திருகோணமலை.

## எல்லைமீறல்

பூமி ஒருநாள்
பொறுமை இழந்து
பூகம்ப மாகியது! —பெரும்
பூகம்ப மாகியது!

வானம் தொடர்ந்து
கண்ணீர் வடித்து
வெள்ளம் பெருக்கியது — தன்
வெறுப்பை உணர்த்தியது!

வீசும் தென்றல்
புயலாய் மாறி
வேதனை கூடியது — புவி
வெறிச் சென்றாகியது!

ஆழி மேலெழு
அலைகள் பாய்ந்து
அனர்த்தம் நிகழ்த்தியது! - பெரும்
அவலம் பெருக்கியது

ஊழித் தாண்டவம்
ஆடும் இயற்கை
எல்லை மீறியது — தன்
எல்லை மீறியது!

ஆயிரம் துன்பம்
தாங்கும் பெண்ணே!
இதனை உணர்வாயே! - இடர்
விலங்கை உடைப்பாயோ?

# பெண்களே அழகு

ஆணில் மானும் மயிலும் தான்
அழகு என்று சாந்தி கொள்ளும்
ஆண்கள் நிலையோ பரிதாபம்!
அவர்கள் அழகைச் சாற்றுதற்குப்
பாரில் உவமை இலை யதனால்
பரிதவித்துப் போகின்றார் - கொண்டைச்
சேவல் அழகைக் கூறுகின்றார் - கொடிய
சிங்கம் சிலிர்ப்பதைக் காட்டுகிறார்!
ஏனிவ் வாண்கள் தமதுறுப்பை
எடுத்துச் சொல்ல மறந்திட்டார்?

வீரம் வேறு: அழகு வேறு:
வித்தி யாசம் புரியாது
ஆணைப் பெண்ணுக் கொப்பிட்டுத்தம்
ஆற்றல் தனையே மெச்சுகிறார்!
மானின் அழகு மானுக்கே
மலர்ச்சி தருவதை மறந்திட்டார்!
தாமே அழகு என்றுரைத்துச்
சாந்தி கொள்ளும் ஆடவரே:
மானின் விழிகள் உமக்குண்டோ?
மஞ்சு போலும் கூந்தலுண்டோ?

பெண்ணின் மென்மை ஓர் அழகு
பேசும் போது அடக்க மெனும்
தன்மை கூடப் பேரழகு!
தங்கச் சிலையாம் பெண் "அழகு"
எண்ணி லடங்காப் பாவலர்கள்
இயற்றித் தந்த வர்ணனைகள்
பெண்ணின் அழகைப் பறைசாற்றும்!
பின்பும் ஆணே அழகென்று
உண்மை மூடிக் கவிபாடின்
உலகம் ஏற்குமா? சொல்லும்

அஷ்ரபா நூர்தீன்

14.07.1985 'சிந்தாமணி' (07.07.1985ல் ஏ.இக்பால் எழுதிய "ஆண்களே அழகு" என்ற கவிதைக்கு பதிற்கவிதை.

---

கவிதை சம்பந்தமான குறிப்புக்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களோடு மொழிபெயர்ப்புக் கவிதைகளும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

பயில் களம்

## நீங்களும் எழுதலாம் முகவரிகள்

*முகவரி :03, ஆர்.ஜோயல்ஜைரஸ்*



மட்டக்களப்பு கல்முனையைச் சேர்ந்த ஜோசப் ரவீந்திரன் ஜோயல் ஜைரஸ் நீங்களும் எழுதலாம் இதழில் "மாற விரும்பா பள்ளிப்பருவம்" எனும் கவிதையை எழுதியதனூடாக இலக்கிய உலகில் தடம் பதிக்கிறார். 1993 இல் கல்முனையில் பிறந்த இவர் கமு / கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் உயர்தர மாணவராவார். பாடசாலை மட்டத்தில் தனது நண்பருடன் இணைந்து தரம் 10 ற்கான வரலாற்று புத்தகமொன்றை வெளியிட்டிருக்கும் இவர் தொடர்ந்து இது உனக்காக , வீண்வாழ்க்கை , ரீனேஜ் எனும் கவிதைகளை எழுதியதனூடாக "நீங்களும் எழுதலாம் முகவரியில்" இனங் காட்டப்படுவதில் "நீங்களும் எழுதலாம்" பெருமிதமடைகிறது.

### மௌனமாய் போன நட்புகள்

மனதினுள் ஏதோ
சில திருப்பங்கள்
காலக்காகிதத்தை கடத்திவிட்ட
பக்கங்கள்
பருவமொன்று வரவேற்று
மீண்டும் கையசைத்து
திருப்பி விட்டது என்
சில நினைவுகளை

இரவிலும் சூரியன்சுடுகின்றது
மனம் தேற்ற வரமாக வரும்
மழைத்துளிகளும் ஏமாற்றி
எனை எரிக்கின்றது.....
என்ன நான் செய்வேன்
நினைவுகளே பதில் தாருங்கள்

முகவரி:
35, யாட் வீதி கல்முனை

நினைக்க நினைக்க
இனிக்கும் நினைவுகள்
கண்களோரங்களில்
கனவுகளாய் பதுங்குகின்றன
கனவுகளுக்கு "உயிர்' கொடுக்க
உடனிருந்த பல நட்புக்கள்
என்னருகிலில்லை இன்று....

இன்று என்னறையின்
சுவர்கள் நான்கு மட்டுமே
நன்கு என் உணர்வுகளை
அறிந்தும் தெரிந்தும்
தெரியாதது போல்
மௌனித்துக் கிடக்கின்றன.

---

## பாரதி கண்ட புதுமைப்பெண்

பாரதி கண்ட கனவுப் பெண்
பார் எங்கும் போற்றும் புதுமைப்பெண்
கண்களிலே ஒளியுடனே அவள்
காரிருளை அகற்றிடுவாள்
கம்பன் இசைத்தமிழ் போலே அவள்
கம்பீரமாய் தொனித்திடுவாள்.

நெஞ்சமதை நேர்வழியாய்
நடத்திடுவாள் - அவள்
நினைவுகளை தூய்மையாய்
நிதம் பேணிடுவாள்
அன்பு ஒளி வீசுகின்ற – அவள்
அறிவொளி மங்கிடாது

நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தி – அவள்
நித்தம் உழைத்து உணவு உண்பாள்
நிறை மதி போல இருளில்
நிறைந்த ஒளி தந்திடுவாள்
உருக்கமான இரக்கமுள்ள – அவள்
உண்மையுள்ள ஜீவனாவாள்

க.வினுஷியா
தி/செல்வநாயகபுரம்இந்து ம.வி

ஆக்க பூர்வமான விமர்சனங்கள் ,
கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

## மனித நேயம்

மனிதன் மண்ணிற்குள்
உயிருடன் புதைக்கப்படவே
கூடவே புதைக்கப்படுகின்றது
மனித நேயமும்!
மனித மனங்களிலிருந்து
தூக்கியெறியப்படும்
மனித நேயமும்;
மனிதாபிமானமும்;
மானிடர் மனத்தில்
மனச்சாட்சியும் கூட
மனிதாபிமானத்தை – மறைக்க
மறக்க;

மனித நேயம் என்றொருவார்த்தை
அகராதியில் கூட
அழிக்கப்பட்டுவிடுமோ?
என்ற ஏக்கம் - எம்
கண்களில்!

எடுத்தியம்ப வார்த்தையில்லை
எழுதுகின்றேன் கவிதையில்
மனிதமனங்களில் தான் இல்லை
மனிதநேயம் - என்
கவிதையிலாவது!
இருக்கட்டும்...............

என். சாமிலன்
யா/ நெல்லியடி ம.ம.வி

---

## காத்தல் கடனே


சிங்கள மொழியின்
உறவல்லவா தமிழ்
உன் உறவை நீயே
காயப்படுத்தலாமா?
பௌத்த மதம்
வலது கண்ணென்றால்
இந்து மதம்
இடது கண்ணல்லவா
சிறுபான்மை காத்தல்
பெருபான்மை கடனல்லவா
சமாதானப்புறாவே
உன் இரு சிறகுகளையும்
தயார்படுத்திக்கொள்
உன் அடைகாப்பு
அழிந்து விடாதிருக்க!

கு.கார்த்தீபன்,
வவுனியா / விபுலாநந்தாக் கல்லூரி.

மார்க்சிய உளவியலும் அழகியலும்

*வெளியீடு : இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம்*

*ஆசிரியர்:* சபா ஜெயராசா




"பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் தெளிந்த மார்க்சிய நோக்கும் கலை இலக்கியங்களை மார்க்சிய கருத்தியலை அடியொற்றி ஆய்வு செய்த முறைமையும் தமிழியலிலே புதிய புலக்காட்சிகளைத் தோற்றுவித்தன. அவர் உருவாக்கிய ஆய்வு வழித்தடம் பலமும் உறுதியும் கொண்ட அறிகைச் செழுமை பெற்றிருந்தமையாற் பின்னைய ஆய்வாளர்களுக்கு அது வினையாற்றல் மிக்க தேர்ச்சியை அளித்த வண்ணமுள்ளது. எனக்கூறுகிறார் பேராசிரியர் சபா.ஜெயராசா.

வைக்கோட்சி, எரிக்புரோம், அலெக்சாந்தர் லூரியா, அலெக்சி லியோண்டிவ், லூகஸ் கெர்பட் மார்க்யூஸ் அந்தோனியோ கிராம்சி, மிசேல் பூக்கோ என்பவர்களின் கருத்துக்கள் அடங்கியதாக 26 தலைப்புக்களில் எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கியுள்ளன.

தொடர்பு: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 18-6/1, கொலிங்வூட் பிளேஸ் கொழும்பு-06

களங்களை விரித்துள்ளோம்
ஆக்கங்களை அனுப்புங்கள்.

(கருத்தாடற் களம்)

## கவிஞன் என்பவன் ............

பேராசிரியர் சொன்ன 'செங்கல்' என்ற தலைப்பில் கவிதை எழுத வேண்டும் என அவன் இரவு முழுவதும் யோசித்தான்.

'செங்கல்' ஏனையவற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? அதன் தனித்துவம் என்ன? அதன் உருவாக்கம், பயன்பாடு போன்ற விடயங்களைச் சிந்தித்தபொழுது அந்த மாணவனிடத்தில் பிறந்த உட்பொருள், சொல்ல எடுத்துக் கொண்ட உத்தி அவனை பின்வருமாறு எழுதவைத்தது.

'எல்லாம்
சுட்டபின்பு
இறக்கின்றன
நீ மட்டும்
சுட்ட பின்பே
பிறக்கின்றாய்"

ஆக, கவிஞன் உருவாக்கப்பட்டுள்ளான். முடிவாக கவிஞன் உருவாகின்றான் என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

ந. பார்த்தீபன்,
ஆசிரிய மாணவ விரிவுரையாளர்.

கவிஞர்கள் உருவாக்கப்படுகிறார்களா? பிறக்கிறார்களா? என்ற கேள்வி பல வாதப்பிரதி வாதங்களோடு அலசப்படுகிறது. பொதுவாக கல்வி , செல்வம் , வீரம் , அழகு எனபனவெல்லாம் கொண்டு பிறத்தல் வேண்டுமென பலரும் கூறுவதைப் பார்க்கிறோம். இது போல எழுத்தாற்றல் கவித்துவம் போன்றனவும் இறைவன் கொடுத்தவரம் , கடவுளின் கடாட்சம் என்றெல்லாம் கூறுவதைக் கேட்கின்றோம். போதாக்குறைக்கு "கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்" என்று சொல்வதும் உண்டு. மகாகவி காளிதாசனுக்கு காளி நாக்கிலே சூலத்தினால் கோடு போட்டது தான் கவித்துவத்தில் அவன் சிறந்து விளங்கக் காரணமென ஒரு கதையும் உண்டு.

மேலும் சரஸ்வதித் தெய்வத்தின் கடைக்கண் பார்வை தான் கல்வியில் சிறந்து விளங்கக் காரணமெனக் கதைப்பதையும் பார்க்கின்றோம். மேற்கூறியவற்றிலிருந்து கவிஞரும் பிறக்கின்றனர். என்ற கருத்தை முன்வைப்பவர்கள் உண்டு. ஆனால் கவிஞர்கள் உருவாக்கப்படுகின்றார்கள் என்பதற்கு பின்வரும் சம்பவத்தைப் பார்ப்போம்.

ஒரு பேராசிரியர் வகுப்பை முடித்துவிட்டுச் செல்லும் போதெல்லாம் ஒரு மாணவன் "சேர் கவிதைக்கொரு தலைப்புச் சொல்லுங்கோ" என்று கேட்பானாம். மாணவனிலும் தவறில்லை. எல்லாத் தலைப்புக்களிலும் கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. ஒரே தலைப்பிலேயே பல்வேறு கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. இந்நிலையில் அங்கலாய்த்த மாணவன் பேராசிரியரிடம் தலைப்பைக் கேட்டுள்ளான். தினமும் இப்படிக்கேட்டு தன்னைத் தொந்தரவு செய்வதாக நினைத்த பேராசிரியர் போகிற போக்கில் "இந்தச் செங்கல்லைப்பற்றி எழுது" என்று சொல்லி விட்டுச் சென்றுள்ளார். மாணவனுக்கு தன் கேள்வியைத் தட்டிக் கழிக்கத்தான் பேராசிரியர் இந்தத் தலைப்பைச் சொல்லிவிட்டு சென்றதாக நினைக்கத் தோன்றவில்லை. பேராசிரியர் சொன்ன "செங்கல்" என்ற தலைப்பில் எழுத வேண்டுமென அவன் நினைத்தான். இரவு முழுவதும் யோசித்தான். செங்கல் ஏனையவற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது. அதன் தனித்துவம் என்ன? காலையில் தான் எழுதியதைக் கொண்டு சென்று பேராசிரியரிடம் கொடுத்தான். அந்தப் பேராசிரியர் அதனை வாங்கிப் படித்தார். அவருக்கு ஆச்சரியமாய் இருந்தது. அழகான சிறந்த கவிதை ஒன்றை அவன் படைத்துள்ளான் என்று அவர் கூறுகின்றார். அந்தக் கவிதை பின்வருமாறு

**செங்கல்**

**எல்லாம்**
**சுட்ட பின்பு**
**இறக்கின்றன**
**நீ மட்டும்**
**சுட்ட பின்பே**
**பிறக்கின்றாய்**

இந்தக்கவிதையைப் படித்த போது அந்த மாணவனின் கவித்துவம் தன்னைப் பெரிதும் கவர்ந்ததாகவும் அவன் நல்ல கவிஞனாக உருவாக்கப்பட்டுள்ளான் என்றும் பேரசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

செங்கல்லுக்கு என்ன தனித்துவம்? எப்படி அது கூட ஏனையவற்றிலிருந்து வேறுபடுகிறது? அதன் உருவாக்கப்பயன்பாடு மக்களிடத்தில் அதற்கிருக்கும் மவுசு.... போன்ற விடயங்களை பற்றிச் சிந்தித்த போது அந்த மாணவனிடத்தில் பிறந்த உட்பொருள் , அதனைச் சொல்ல அவன் எடுத்துக்கொண்ட உத்தி போன்றன அவனால் அந்தத் தலைப்பில் ஒரு கவிதையை உருவாக்க முடிந்தது. என்று பேராசிரியர் கூறுகிறார். ஆக கவிஞன் உருவாக்கப்பட்டுள்ளான். முடிவாக கவிஞன் உருவாகின்றான். என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

இந்தச் சம்பவத்தைக் கூறியதுடன் , மூன்று , நான்கு வரிகளில் நறுக்காக தன் உணர்வுகளை உணர்ச்சிச் செறிவுடன் , கருத்தாழமாய் வெளிப்படுத்த வேண்டும். உங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை , சங்கடங்களை , பாரபட்சங்களை அழகாக வெளிப்படுத்த உங்களுக்குத் தெரிய வேண்டும் என ஓர் ஆசிரியர் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கூறி , பின்வரும் கவிதையையும் ஒப்புவித்தார்.

***யன்னலுக்கு***
***எத்தனை சட்டைகள்***
***என் சட்டையில்***
***எத்தனை***
***யன்னல்கள்***

இக்கவிதையில் ஏழை , பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு எப்படிவெளிப்பட்டுள்ளது. பார்த்தீர்களா? என்று விளக்கம் வீட்டு யன்னல்களுக்கு அழகான சட்டைகளை மாற்றுகின்ற மக்கள் மத்தியிலே , கிழிந்து , மீண்டும் தைத்துப் பாவிக்க முடியாத சட்டையுடன் இருப்பவர்களின் நிலையே ஒரு கவிஞன் எப்படி அழகாக , அர்த்தமாக எடுத்துரைத்துள்ளான்.

பார்த்தீர்களா? என்று விளக்கம் கொடுத்தார் . ஆசிரியர் பின்னர் நீங்களும் இவ்வாறு ஏதாவது எழுதி வாருங்கள் என்று சொல்லி வைத்தார். அடுத்தநாள் காலை ஒரு மாணவன் அதுவும் மலையகத்தைச் சார்ந்தவன் பின்வருமாறு எழுதிவந்து ஆசிரியரிடம் காட்டினான்.

**கொய்தல்**

**கொழுந்தைக்**
**கவனமாகக் கொய்யக்**
**கற்றுத் தந்தவர்கள்**
**எங்கள் கல்வியை**
**முளையிலேயே**
**கொய்து விட்டார்கள்**

“கொய்தல்” என்ற இக்கவிதையைப் படித்துப்பார்த்த ஆசிரியர் ஒரு கணம் திகைத்து விட்டார். அந்த மாணவனைக் பாராட்டியதோடு, ஏனைய மாணவர்களையும் இவ்வாறு எழுதி வரும் படி கூறினார். இங்கேயும் ஒரு கவிஞன் உருவாக்கப்பட்டுள்ளான். அதாவது கவிஞன் உருவாகின்றான்.

“செங்கல்” என்ற கவிதையையும் அது உருவாகிய சந்தர்ப்பத்தையும் கேட்டுக் கொண்ட தரம் 7 படிக்கும் மாணவன் ஒரு கவிதை எழுதினான். கவிதைக்கு எடுத்துக்கொண்ட விடயம் ஏனையவற்றிலிருந்து வேறுபட்டதாயும், அவ்விடயம் தனித்துவமானதாகவும் இருக்க வேண்டும் என விளங்கிக் கொண்டான். இந்நிலையில் அவன் எழுதிய கவிதை பின்வருமாறு.

**தண்ணீர்**

***பனிப்பிரதேசத்தில்***
***திண்மமாகவும்***
***ஆறுகுளங்களில்***
***திரவமாகவும்***
***வான்வெளியில்***
***வாயுவாகவும்***
***நீ மட்டுமே***
***உருவெடுப்பாய்***
***தண்ணீரே உன்***
***தனித்துவம்***
***வேறெதற்குண்டு?***

இவ்வாறான கவிதைகளில் கவித்துவம் குறைந்திருப்பினும் வித்தியாசமாகச் சொல்ல வேண்டும். வேறுபாட்டை இனங்காண வேண்டும். ஆழ்ந்த சிந்தனையும் ஆர்வமும் எழுதத் தூண்டுவதனால் எழுதுகிறார்கள். எழுதி, எழுதி தம்மைத்தாமே திருத்தி சிறந்த கவிஞர்களாக முயற்சிக்கிறார்கள். இம் முயற்சியல்லவா இவர்கள் நல்ல கவிஞர்களாக பரிமாணம் பெற காரணமாகின்றது.

ஆக, கவிஞர்கள் பிறக்கிறார்கள். அது ஒரு கவிக்குடும்பம், தந்தை, தந்தையின் தந்தை என பரம்பரையாக அது வருகின்றது. என்றெல்லாம் சிலோகித்துக்கொண்டிருக்காமல் புதிய கவிஞர்கள் உருவாக இச் சிந்தனை அவசியமென நம்புகிறேன். கவிஞர்கள் மட்டுமல்ல, ஏனைய துறைகளிலும் ஒவ்வொருவரும் உருவாக்கப்படுகிறார்களே தவிர பிறப்பதில்லை என்றே கூற வேண்டும்.

*உங்கள் கருத்தாடலை எதிர்பார்க்கிறோம்*

## கொழுந்து

பெப்ரவரி-மார்ச் 2010

ஆசிரியர்:அந்தனிஜீவா




விலை 50/=

“இலங்கைப் பெண்களின் வாக்குரிமைக்காகப் போராடிய மலையகத்தின் முதற் பெண்மணி கோ.ந.மீனாட்சி அம்மாள் அவர்கள் பற்றிய குறிப்பாக ஆசிரிய தலையங்கம் அமைந்துள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸின் “தமிழ்மொழி ஒரு செம்மொழி”, கே.எஸ். சிவகுமாரனின் “யாழ்ப்பாணத்துப் பெண்ணொருத்தி ஆங்கிலத்தில் புனைகதை எழுதுகிறார்” கலாநிதி செ. யோகராசாவின் “ஈழத்தின் முதற்பெண்கவிஞர்” போன்ற இன்னும் பலரின் கட்டுரைகளோடு கதை, கவிதைகள் தகவல் குறிப்புகள் போன்ற பல்வேறு விடயங்களைத் தாங்கி அழகிய தளவழவத்துடன் “கொழுந்து” வெளிவந்துள்ளது.

தொடர்பு:57,மகிந்தபிளேஸ்,கொழும்பு-06

T.P : 0776612315

---

புனிதமானவை

“........சரித்திரங்கள் புனிதமானவை
யுத்தங்கள் புனிதமானவை
மரணம் புனிதமானது
மதத்தின் பேராலே
செய்கின்ற
கொலையும் புனிதமானது
புனிதமான பாரத பூமியில்
மனித உயிரை விட
யாவுமே புனிதமானவை”

சி.சிவசேகரம் (நன்றி ஏகலைவ பூமி)

**காற்று வெளி** (ஏப்ரல் 2010)

(நினைத்த போது வெளிவரும் இதழ்)




ஆசிரியர் : ஷோபா

தொடர்பு : இ.மகேந்திரன்(முல்லை அமுதன்)
Redriffe Road, Plaistow
London,
E13 OJX

"காத்திரமான சஞ்சிகையின் தொடர் வருகையும் அது புலம் பெயர் சூழலை உள்வாங்கியபடி நகர்த்தப்படவேண்டிய சத்திய வேட்கையும் , நடைமுறைப்படுத்தப்படவேண்டிய ஆவலும் வாசகர்களிடையே ஏற்பட்டுள்ளதை புரிதல், காற்று வெளிக்கும் ஏற்பட்டுள்ளதன் விளைவே காற்று வெளியின் நகர்தலுமாகும்." எனும் ஆசிரியர் தலையங்கத்துடன் அமையும் காற்றுவெளியில் கவிதைகள் , கட்டுரைகள் , சிறுகதைகள் நேர் காணல் என பல்வேறு அம்சங்கள் அடங்குகின்றன.

---

## பதிவுகள்

### க.யோகானந்தனின் "என்மனவானில்" நூல் வெளியீட்டு விழா

க.யோகானந்தன் எழுதிய "என்மனவானில்" கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியில் 03.04.2010 அன்று கலாபூஷணம் கேணிப்பித்தன் ச. அருளானந்தம் தலைமையில் இடம் பெற்றது. பிரதம விருந்தினராக சிரேஸ்ட சட்டத்தரணி ஆ.ஜெகசோதி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக சண்முகா அதிபர் திருமதி.சு.ஜெயபாலன் அவர்களும் கிழக்குமாகாண கலாசார உத்தியோகத்தர் க. அன்பழகன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். முதற் பிரதியை ஜெகசோதி அவர்களுக்கு சட்டத்தரணி சி.புலேந்திரன் வழங்கி வைத்தார். அறிமுகவுரையை எஸ்.ஆர் தனபாலசிங்கமும் , நயவுரையை எழுத்தாளர் ஆ. யதீந்திராவும் ஆற்றினர்.

# எல்லாமுமாகுக

சகல படித்தான மௌனங்களும்
இதோ
உங்களைப் பேசவைக்கின்றன
எங்களுக்காய்
அட்சய பாத்திரங்களைப் பரிந்துரைக்
கின்றீர்

ஒரே கல்லில் பல மாங்காய்களை
வீழ்த்தி விட்ட பூரிப்பில்
இனி
நீங்களே எல்லாமுமாக!

எங்கள் குரலாக
நீங்கள் ஒலிப்பீர்களாம்
அனைத்தையும் நிர்மூலமாக்கிவிட்டதான
நிம்மதிப் பெருமூச்சோடு
இனி
நீங்களே எல்லாமுமாக!

கன்னை பிரித்து
ஆடியதில்
கால்கள் நோவு கண்டிருந்தாலும்
கவனத்தைத் திருப்புவதில்
கவனமாய்ச் செயற்பட்ட
கைங்கரியக் காரர்களே
இனி
நீங்களே எல்லாமுமாக!

"தெற்கிலோ வடக்கிலோ
இனி எதுவும்
எழும்பா
அந்தவழி இனி யாரும்
ஏறெடுத்தும் பாரார்
ஒரு பேச்சுக்குத் தன்னும்
மூச்சு விடமாட்டார்" என
மனப்பால் குடிப்பவர்களே
எல்லாமுமாகுக
ஆம்! சற்றே காலம்!

எஸ்.ஆர்.தனபாலசிங்கம்.

## தாயகம்

(கலை இலக்கிய விஞ்ஞான கலாண்டிதழ்)

இதழ்: 77 ஜனவரி–மார்ச் 2010
பிரதம ஆசிரியர் : க.தணிகாசலம்



விலை : 50/=

“மௌன எதிர்ப்பும் மாற்று அரசியலும்” , “மீண்டும் வருவார்கள்” எனும் இரு தலைப்புக்களில் தீட்டப்பட்ட ஆசிரிய குழுவின் தலையங்கத்துடன் த.ஜெயசீலன் , நல்லை அமிழ்தன் , சோ.பத்மநாதன் , பரதேசிப் பாவாணர் , வனஜா நடராஜா , புலேந்தி திலீப்காந் , சி.கிருஷ்ணா , பாமரன் , அழ.பகீரதன் , யாழினி , எல்.வஸீம் அக்ரம், கன்னிமுத்து வெல்லபதியான் , க.சுதர்சன் , புலோலியூர் வேல் நந்தன் ஆகியோரது கவிதைகளையும் , இதயராசன் , புவன ஈஸ்வரன் , இரா.சடகோபன் , தி.சி.ஜெகேந்திரன் ஆகியோரது சிறுகதைகளையும் , சி. சிவசேகரத்தின் நாடக விமர்சனத்தையும் மற்றும் , மொழிபெயர்புக் கவிதைகள் , பாடல்கள் என பல்வேறு விடயங்களையும் தாங்கிவந்திருக்கிறது “தாயகம்” கலாண்டிதழ்

தொடர்பு : க.தணிகாசலம்
பிரதம ஆசிரியர்
ஆடியபாதம் வீதி
கொக்குவில்
T.P – 0212223629

Editor
“Thayakam”
No : 152 – 1/6
Hulfts Drop Street
Colombo – 12
T.P : 0115024358
0112381603

## வாசகர் கடிதம்

### கலா விஸ்வநாதன், கொழும்பு

'ஒன்றுபட்டால்' ஆசிரியர் தலையங்கம் உண்மையான நல்ல சக்திகள் மேற்கிளம்ப வேண்டும். எழுத்துத்துறை சார்ந்தவர்கள் எழுச்சியடைய, இலக்குநோக்கி பயணிக்க, நீங்களும் நாங்களும் எழுதலாம். யாரை? எங்கே? எப்படி வைப்பது? என்பதை நாம் எழுதித்தானே தீர வேண்டும். எழத்து – 15 கவிதைகள் கனதியை காட்டுகின்றன. மட்டுவில் ஞானக்குமாரனின் கவிதை குறியீட்டுணர்வுடன் எழுதப்பட்டிருக்கின்றது. எனினும் தலைப்பு "புதிய இராமாயணம்" என்பது தான் எனக்குச் சரியாகப்படுகின்றது. அந்த தலைப்புக்குள் எதனையாவது உணர்த்த முயற்சிக்கின்றாரோ? அப்படியென்றால் அத்தலைப்பு சரியானதென்றே படுகிறது.

அறிமுகத்தின் அருகே கவிதையும் இருப்பது சிறப்பு.

அத்துடன் சுபத்திரன், மகாகவி போன்றோரின் சிறப்புவரிகள் வந்தன. தொடரட்டும் உங்கள் இலக்கியப்பணி.

---

### நீலாபாலன் , வெலிமட

படித்த கவிதைகளுள்.. நல்லை அமிழ்தனின் "எமது குடிசைகளில்" தங்களின் "தூசுபடியும் காற்று" இரண்டிலும் பார்வை இருந்தது. படிமப்பாஷை.... இன்னும் பல பலரதும் உணர்வுகளைப் பத்திவைத்தது. அனுபவங்கள் பதிவுகள்தானேஇலக்கியங்கள்.மொழிப்பரிச்சயமும் , இலக்கண , யாப்பியல் படிப்பும் ஒருவனைக் கவிஞனாக்கி விடாது.

ஆழ் மனதின் செப்பல்களை தொகுத்துத் தரும் கவிஞனது ஆற்றலே நல்ல கவிதைகளைப் பிரசவிக்கின்றது. அப்படியான வீரியமுள்ள தேடல்கள் இன்னும் வரட்டும். தங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.

கணனி மயப்படுத்த உதவிய ஆர்.நித்தியா,மைதிலி, வானதி (**Edgenet Cafe** உவர்மலை) அவர்களுக்கும் அழகுற அச்சிட்டு உதவிய அஸ்ரா பதிப்பகத்தினருக்கும் நன்றிகள்

## மூலமும் பெயர்ப்பும்

**(Men of England ,heirs of glory,
Heroes of unwritten story
Nurslings of one mighty mother,
Hopes of her , and one another,**

**Rise like lions after slumber
In unvanquishable number
Shake your chains to earth like dew
Which in Sleep had fallen , on you –
Ye are many - they are few.**

**Sow Seed- but let no tyrant reap,
Find Wealth – let no imposter heap,
Weave robes- let not the idle wear,
Forge arms- in Your defence to bear)**

ஷெல்லி

### Mask of Anarchy
### அராஜகத்தின் முகமூடி

"இங்கிலாந்தின் மக்களே!
மகோன்னதத்தின் வாரிசுகளே!
எழுதாத கவிதையின் வீரர்களே!
மாபெரும் ஒரே மாதாவின் குழந்தைகளே!
அவளுக்கும், உங்களுக்கும்
ஒருவருக்கொருவர்
நம்பிக்கைகளாய்த் திகழ்வோரே!

"தூங்கிக் கிடந்த சிங்கங்கள்
விழித்தெழுந்து வருவது போல்,
அழிக்கமுடியாத பெருந்திரளாய்
எழுச்சிபெறுங்கள்!
நீங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது
உம்மீது விழுந்த விலங்குகளைப்
பனித்துளிகளைச் சிதறவடிப்பது போல்
பூமியில் சிதறவடியுங்கள்!
நீங்களோ பலர் - அவர்களோ சிலர்

"விதையை விதையுங்கள் -
ஆனால் எந்தக் கொடுங்கோலனையும்
அறுக்கவிடாதீர்கள்,
செல்வத்தை தேடுங்கள் -
ஆனால் எந்த ஏமாற்றுக்காரனையும் குவிக்க
விடாதீர்கள்.
ஆடைகளை நெய்யுங்கள் -
ஆனால் சோம்பேறிகள் அவற்றை அணிய
விடாதீர்கள்,
ஆயுதங்களை செய்யுங்கள்-
ஆனால் அவற்றை உங்கள்
தற்காப்புக்காகவே தாங்கி நில்லுங்கள்!"

தொ.மு.சி. ரகுநாதன்

**ISSN 1800 - 3311**